# மார்ச் – 06 – புதன்

## திருநீற்றுப் புதன் - தவக்காலம் ஆரம்பம்

**ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்: என் பாவம் எப்போதும் என் மனக் கண்முன் நிற்கின்றது. திபா. 51:3**

## முதல் வாசகம் : யோவேல் 2 : 12 – 18

ஆண்டவர் கூறுகிறார் ' இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர்.நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்.' அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர் நீடிய பொறுமையுள்ளவர், பேரன்புமிக்கவர் செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர்.ஒருவேளை அவர் தம் மனத்தை மாற்றிக்கொண்டு, உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு தானியப் படையலையும் நீர்மப் படையலையும் நீங்கள் அளிக்குமாறு உங்களுக்கு ஆசி வழங்குவார். இதை யார் அறிவார்?சீயோனில் எக்காளம் ஊதி எச்சரியுங்கள் புனிதமான உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள் வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள்.மக்களைத் திரண்டு வரச்செய்யுங்கள் புனித கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் முதியோரைக் கூடிவரச் செய்யுங்கள், பிள்ளைகளையும் பால் குடிக்கும் குழந்தைகளையும் ஒருசேரக் கூட்டுங்கள் மணமகன் தன் அறையை விட்டு வெளியேறட்டும் மணமகள் தன் மஞ்சத்தைவிட்டுப் புறப்படட்டும்.ஆண்டவரின் ஊழியர்களாகிய குருக்கள் கோவில் மண்டபத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையே நின்று அழுதவண்ணம், ஆண்டவரே, உம் மக்கள்மீது இரக்கம் கொள்ளும் உமது உரிமைச்சொத்தை வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக்காதீர் ' எனச்சொல்வார்களாக! அவர்களுடைய கடவுள் எங்கே?' என வேற்றினத்தார் கூறவும் வேண்டுமோ?அப்பொழுது ஆண்டவர் தம் நாட்டின்மேல் பேரார்வம் கொண்டு தம் மக்கள் மீது கருணை காட்டினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே இரக்கமாயிரும். ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

## இரண்டாம் வாசகம் : 2 கொரிந்தியர் 5 : 20---- 6 : 2

சகோதரர் சகோதரிகளே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார். நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அருளை வீணாக்க வேண்டாம் என அவரோடு இணைந்து உழைக்கும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். "தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன் விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்" எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!

## நற்செய்தி : மத்தேயு 6 : 1 – 6, 16 - 18

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : "மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது. நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழவேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும் மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக் காரரைப்போல் இருக்கவேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்" என்றார்.

**தியானம்:** இன்று வீபூதி புதன். தவக்காலத்தின் ஆரம்பநாள் இன்று. திருப்பலியில் நெற்றியில் சாம்பல் பூசிமனமாற்றத்தின் அடையாளத்தை பெறுகிறோம். எமக்கு கொடுக்கப்பட்ட 40 நாட்களும் இறைவனின் மீட்பையும் திட்டத்தையும் அறிந்த கொள்ளும் நாட்களாக தரப்படுகிறது. எமது வாழ்கையில் மனமாற்றம் முக்கியம். மாற்றம் வெறும் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலுமல்ல, மனங்களில் தான் உண்டு. உடைகளை அல்ல உள்ளங்களை கிளித்துக்கொள்ளுங்கள் என்ற கிறிஸ்தவ ஆன்மீகத்தின் சாராம்சத்தை இன்றைய நற்செய்தி வாசகம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு ஆன்மீகம் இருக்கிறது. கிறிஸ்தவம் என்பது பக்தியோடு நின்றுவிடுவது கிடையாது. மாறாக, செயல்பாடுகளுக்கும் முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. இன்றைக்கு வழிபாடா? செயல்பாடா? என்று, மக்கள் மத்தியிலும், தலைவர்கள் மத்தியிலும் மிகப்பெரிய விவாதங்கள் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு சிலர் வழிபாட்டில் நிறைவு காண்கிறார்கள். மற்றும் சிலர், செயல்பாடே சரியான பாதை என்று, அதில் மகிழ்ச்சி காண்கிறார்கள். இவையிரண்டையும் ஒருபோதும் பிரிக்க முடியாது என்பதை, இயேசுவின் போதனையும், அவரது வாழ்வும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. செபம், தவம் மற்றும் தர்மம் என்கிற, இந்த மூன்றையும் இணைத்து, புரட்சிகரமான ஆன்மீகத்தைத் தருவதுதான் கிறிஸ்தவ ஆன்மீகம். செபம் நம்மை செயல்பாட்டிற்கு உந்துசக்தியாக இருக்கும் வகையில் வழிநடத்த வேண்டும். அதேபோல, செயல்பாடு சிறப்பாக அமைய நமது செபவாழ்வு சிறப்பாக அமைய வேண்டும். ஒன்று மற்றொன்றிற்கு இணையானதாக, இயல்பானதாக வழிநடத்த வேண்டும். இயேசு இந்த இரண்டையும் தனது வாழ்க்கையில் ஒருசேர இருக்குமாறு பார்த்துக்கொண்டார். செபிப்பதை அவர் விட்டுவிடவில்லை. அதேபோல, அவருடைய செயல்பாடும் அதற்கு இணையானதாக இருந்தது. நமது கிறிஸ்தவ வாழ்க்கை பல சமயங்களில் வழிபாட்டோடு முடங்கிப் போவதாக இருக்கிறது. வாழ்வைத் தொடாத வழிபாடுகள் தான், நம் மத்தியில் ஏராளம். இன்றைக்கு வழிபாட்டின் மீதான ஈர்ப்பும் குறைந்து வருவது வேதனையிலும் வேதனை. ஆனாலும் உண்மை. இந்த வேறுபாடுகள் மறைந்து, இணைந்த ஓர் ஆன்மீக வாழ்வை நாம் முன்னெடுப்போம்.